// இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
வர்த்தமானப் பத்திரிகை

**2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2016.08.15 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

# குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)

**1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 6.00 தபாற் செலவு : ரூபா 10.00

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2*** *: இவ்வாசகம், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் 37அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் அச்சட்டத்தினை திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, எந்த ஆள் ஒருவரின் கூற்றுக்கள் பதியப்பட்டுள்ளதோ ஆனால் அவர் நீதிவான் ஒருவர் முன்னிலையில் கொணரப் படாதுள்ளாரோ அந்த ஆள் அவருடைய சொந்தச் செலவில் அல்லது அவர் அத்தகைய சட்ட ஆலோச னைக்கான செலவுகளை பொறுப்பெடுப்பதற்கு இயலாதவராகவிருக்கின்றவிடத்து, சட்ட உதவி ஆணைக் குழுவின் உதவியுடன் சட்ட ஆலோசகர் ஒருவரை அமர்த்துவதற்கும் ஆலோசனையைப் பெறுவதற்கும் பொலிசுக் கட்டுப்பாட்டிலுள்ள அந்த ஆளின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்வதற்காகும்.*

## குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)

*ச.வ.ஒ 2/2016*

### *1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தினைத் திருத்துவதற்கான தொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சட்டத்தில் 37அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**2.** 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அக்கோவையின் 37அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும் :-

*“கைது செய்யப்பட்ட ஆட்கள் சட்டத்தரணி ஒருவரை அமர்த்துவதற்கும் ஆலோசனை பெறுவதற்குமான உரிமை.*

37அ. (1) கைதுசெய்யப்பட்டு பொலிசுக் கட்டுக் காவலில் தடுத்துவைக்கப்பட்டுள்ள எவரேனும் ஆள், 110 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அவரது வாக்குமூலங்களை பதிவுசெய்தபின்னரும் அத்துடன் ஒரு நீதிவான் முன்னர் கொணரப்படுவதற்கு முன்னரும் தடுத்துவைக்கப்பட்டவரின் சொந்தச் செலவில் அவரது விருப்பப்படி சட்டத்தரணி ஒருவரை அமர்த்தி அவரிடமிருந்து ஆலோசனை பெறுவதற்குமான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அவ்வாறு கைதுசெய்யப்பட்ட ஆள் அவரது சொந்தச் செலவில் சட்டத்தரணி ஒருவரை அமர்த்துவதற்கும் அவரிடமிருந்து ஆலோசனை பெறுவதற்கும் இயலாதவராக இருக்கின்றார் என இயைபான பொலிசு நிலையத்தின் பொறுப்பு அலுவலருக்கு அறிவித்தால், 1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, சட்ட உதவிச் சட்டத்தின்கீழ்

2-PL 010095 - 425 (2016/07)

தாபிக்கப்பட்ட இலங்கை சட்ட உதவி ஆணைக் குழுவிடமிருந்தான ஒரு சட்டத்தரணியின் சேவையானது, சட்ட உதவி ஆணைக்குழு அத்தகைய சேவையை வழங்குவதற்கான நிலைமையில் இருக்கின்றவிடத்து அவருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(3) இயைபான பொலிசு நிலையத்தின் பொறுப்பு அலுவலர் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சேவையை வழங்கும்படி சட்ட உதவி ஆணைக்குழுவிற்கு வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.”.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்